

கரூர் மாவட்ட தி.மு.க. சார்பில், புனித ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு, கரூர் பிரேம் மஹாலில் நடைபெற்ற இஸ்லாமிய சகோதர சகோதரிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், 30 வகையான மளிகை பொருட்களை உள்ளடக்கிய பையை, கரூர் மாவட்ட கழக செயலாளர், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி வழங்கினார். எம்எல்ஏக்கள் பிஆர். இளங்கோ, க.சிவகாமசுந்தரி, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.



இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோவிலில் உபரியாக உள்ள கால்நடைகளை ஒரு கால பூஜை திருக்கோயில் அர்ச்சகர்/ பூசாரிகளுக்கு ஈரோடு திண்டல் வேலாயுத சுவாமி திருக்கோவிலில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி விலையில்லா கால்நடைகளை அர்ச்சகர்/ பூசாரிகளுக்கு வழங்கினார். நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் விசி. சந்திரகுமார், ஈரோடு மாவட்ட அறநிலையக் குழு தலைவர் எல்லபாளையம் சிவக்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.எஸ்.குமாரசாமி, திண்டல் வேலாயுத சுவாமி திருக்கோவில் அறங்காவலர் குழு தலைவர் வேலுசாமி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### நூறு நாள் வேலைத் திட்டத்திற்கான

# நிதியை இழுத்தடிக்காமல் ஒன்றிய அரசு உடனே வழங்கவேண்டும்!

### மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் பேட்டி!



கோவை, ஏப்.2-

கோவை வடகோவை பகுதியில் உள்ள தி.மு.க. அலுவலகத்தில் கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா.கார்த்திக் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர், பா.ஜ.க. அரசு 100 நாள் வேலை திட்டத்திற்கு தரவேண்டிய சுமார் 4034 கோடி நிதியை தராமல் இழுத்தடிப்பதை கண்டித்து தி.மு.க. சார்பில் அனைத்து ஒன்றியங்களிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றதை குறிப்பிட்டார். அந்த நிதி உடனடியாக வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்திய அவர் நிதியை வழங்காமல் இருப்பதற்கு கண்டனத்தை தெரிவிப்பதாக கூறினார்.

மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தொகுதி மறு சீரமைப்பு என்பது நம் மீது தொங்கி கொண்டிருக்கும் கத்திக்கு சமம் எனவும் அது நம்முடைய மாநில உரிமைகளை பறிப்பதற்கும் மாநிலத்தின் நலன்களை பறிப்பதற்கும் பா.ஜ.க. அரசு தரும் தாக்குதல் எனவும் தெரிவித்தார். மேலும் இந்த விவகாரத்தில் அனைத்து மாநிலங்களையும் தமிழக முதல்வர் ஒருங்கிணைத்து நடத்திய கூட்டத்தில் குறிப்பாக நாடாளுமன்றத்தில் தற்பொழுது என்ன நிலைமை உள்ளதோ அதுவே தொடர வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

1971 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் படி பார்த்தால் தமிழ்நாடு, ஒடிசா, கர்நாடகா, கேரளா, தெலுங்கானா, பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் மக்கள் தொகை 23.41%, வட மாநிலங்களில் உத்திர பிரதேசம், பீகார், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் 24.39% மக்கள் தொகை இருந்ததாகவும், தேசிய அளவில் மக்கள் தொகையை கட்டுப்படுத்துகின்ற திட்டங்களை தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்கள் சிறப்பாக செயல்படுத்தியது எனவும் வட மாநிலங்கள் அதனை செயல்படுத்தவில்லை எனவும் விமர்சித்தார். வடமாநிலங்கள் அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலங்களாக உள்ளது என தெரிவித்த அவர் தற்பொழுது அது பிரிக்கப்படும் பட்சத்தில் தென் மாநிலங்கள் பெரிதும் பாதிக்கப்படும் என தெரிவித்தார்.

பொருளாதார வளர்ச்சியில் GDSP 36% பங்களிப்பை தமிழ்நாடு கேரளா ஆகிய மாநிலங்கள் அளிப்பதாகவும் வட மாநிலங்கள் 20% தான் அளிப்பதாகவும் தெரிவித்தார்.

மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு குறித்து பேசுவதற்கு நாடாளுமன்றத்தில் தி.மு.க. எம்.பி.க்களை பேசுவதற்கு விடாமல் தடை செய்து உள்ளதாகவும் அது குறித்தான தெளிவான முடிவைபிரதமர்மோடியோ அல்லது அமித்ஷா கூற வில்லை எனவும் தெரிவித்தார். மேலும் நம்முடைய உரிமைகளை பறிக்கின்ற பல்வேறு செயல்களை மறைமுகமாக செய்து வருவதாகவும் குற்றம் சாட்டினார். மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தது தான் மணிப்பூர் கலவரத்திற்கு காரணமானது என தெரிவித்தார். எனவே தமிழ்நாடு உள்ளிட்ட மற்ற மாநிலங்கள் பாதிக்காமல் இருப்பதற்கு நியாயமான முறையில் பா.ஜ.க. அரசு 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை அமைக்க வேண்டும் இல்லையென்றால் தொடர்ந்து 25 ஆண்டுகளுக்கு மக்கள் தொகையை இன்றைக்கு இருக்கக்கூடிய மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை நீடிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இந்த செய்தியாளர் சந்திப்பின்போது, மாவட்ட துணைச்செயலாளர் கல்பனா செந்தில், மாவட்ட பொருளாளர் எஸ்எம்.முருகன், தலைமை செயற்குழு உறுப்பினர் பாலசுப்பிரமணியன், பொதுக்குழு உறுப்பினர் மணிகண்டன், வட்ட செயலாளர்கள் இராமநாதன், ஆனந்த், வழக்கறிஞர் லிங்கராஜ், தகவல் தொழில்நுட்ப அணி சுரேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### நங்காஞ்சி ஆறு பாசன கால்வாய்க்கு இடம் கொடுத்த

# 65 விவசாயிகளுக்கு ரூ.1.81 கோடி இழப்பீட்டுத் தொகை!

### அமைச்சர் வி.செந்தில்பாலாஜி வழங்கினார்!

கரூர், ஏப்.2-

நங்காஞ்சி ஆறு பாசன கால்வாய்க்கு இடம் கொடுத்த 65 விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி வழங்கினார்.

மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், தலைமையில், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் ஆர்.இளங்கோ முன்னிலையில், அரவக்குறிச்சி வட்டத்தில் ரூ.1.27 கோடி மதிப்பிட்டில் புதிதாக கட்டப்பட்ட 4 புதிய கட்டடங்களை திறந்து வைத்தார். இதில் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பேசுகையில்,

அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அரவக்குறிச்சி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூ.43 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கூடுதலாக கட்டப்பட்ட 2 வகுப்பறைக் கட்டடங்கள், ரூ.53.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட அரவக்குறிச்சி கால்நடை மருந்தகக் கட்டடம், ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட அரவக்குறிச்சி வருவாய் ஆய்வாளர் அலுவலக கட்டடம் என மொத்தம் ரூ1.27 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட 4 புதிய கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

தொடர்ந்து அரவக்குறிச்சி கால்நடை மருத்துவமனையில் நடைபெற்ற விழாயில் ஆதரவற்ற பெண்கள் மற்றும் கணவனை இழந்த பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு தலா 40 நாட்டிண கோழிக் குஞ்சுகள் 50 % மானியத்தில் வழங்கும் திட்டத்தின் மூலமாக 8 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 600 பெண்களுக்கு ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கும் விதமாக 10 பயனாளிகளுக்கு நாட்டின கோழிக் குஞ்சுகளை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி வழங்கினார்.

அரவக்குறிச்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிதழ்ச்சியில், நங்காஞ்சி ஆற்றின் பாசன கால்வாய்க்கு இடம் கொடுத்த 65 விவசாயிகளுக்கு ரூ.1.81 கோடி மதிப்பீட்டில் இழப்பீட்டுத் தொகையினையும், 44 நபர்களுக்கு ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும் என மொத்தம் 111 நபர்களுக்கு ரூ.1.99 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை அமைச்சர் வழங்கினார்.

முன்னதாக கரூர் பேருந்து நிலையத்தில் கரூர் மண்டலம் சார்பாக கரூர்1. கரூர்2 அரவக்குறிச்சி மற்றும் குளித்தலை கிளைகளில் உள்ள பழைய நகரப் பேருந்துகளுக்கு பதிலாக 7 புதிய பேருந்துகளை (கரூர்கரிக்காலி, கரூர்கோட்டநத்தம், கரூர்மாணிக்கபுரம். கரூர்கூணம்பட்டி, கரூர் மூலனூர், குளித்தலை நெய்தலூர் காலணி, குளித்தலை தோகைமலை) அதற்குன்டான வழித்தடங்களில் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியின் போது கரூர் மாநகராட்சி மேயர் வெ.கவிதா. வருவாய் அலுவலர் ம.கண்ணன். தமிழ்நாடு போக்குவரத்துக்கழக கரூர் மண்டல பொது மேலாளர் எஸ்.சிவசங்கரன். கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் மரு. சாந்தி, கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமது பைசல், அரவக்குறிச்சி பேரூராட்சி தலைவர் ஜெயந்தி மணிகண்டன், அரவக்குறிச்சி வட்டாட்சியர் மகேந்திரன். விவசாயிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.




நாகை மாவட்டம் நாகை டாடா நகரில் உள்ள நகராட்சி தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற ஆண்டு விழாவில் தொடக்கப்பள்ளிக்கு நாகை மாவட்டக் கழக செயலாளர் எம் கௌதமன் நன்கொடையாக வழங்கிய மேசை மற்றும் அமரும் இருக்கைகளை பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பள்ளியின் தலைமை ஆசிரியரிடம் ஒப்படைத்தார். உடன் நாகை மாவட்டக் கழக செயலாளர், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன், நாகைமாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், நாகை நகரக் கழக செயலாளரும் நகர மன்ற தலைவருமான இரா.மாரிமுத்து மற்றும் பலர் உள்ளனர்.

### நாடாளுமன்ற தொகுதி மறுவரையறை

# மாநிலங்களின் எதிர்காலத்தை வீழ்ச்சி பாதைக்குக் கொண்டுசெல்லும்!

### திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. பேட்டி!



திருப்பூர், ஏப்.2-

திருப்பூர் மத்திய மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம் முரசொலி மாறன் வளாகத்தில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் நாடாளுமன்ற தொகுதி மறுவரையறை மாநிலங்களின் எதிர்காலத்தை வீழ்ச்சி பாதைக்கு கொண்டு செல்லும் என்று திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் கூறினார்.

அவர் கூறியதாவது : மக்கள் தொகை அடிப்படையிலான நாடாளுமன்ற தொகுதி மறுவரையறை என்பது நமது தலையின் மீது தொங்கும் கத்தியை போன்றது. தமிழ் நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பலத்தை குறைத்து நமது அரசியல் பிரதி நிதித்துவத்தை குறைக்கும் எந்தவொரு நடவடிக்கையும், மாநிலத்தின் உரிமைகளின் மீதும், மக்களின் நலன்களின் மீதும் நேரடியாய் தொடுக்கப்படும் தாக்குதலாகும். கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் இந்தியாவிற்கே வழிகாட்டியாக திகழ்கிறார். அவர் நமது தமிழ்நாட்டின் நலனுக்காக மட்டுமின்றி தொகுதி மறுவரையால் பாதிக்கப்படும் அனைத்து மாநிலங்களுக்காகவும் முன்னணியில் நின்று போராடி வருகிறார். நாடாளுமன்ற தொகுதிகளின் இழப்பு என்பது வெறும் எண்ணிக்கை குறைவு மட்டுமல்ல. இது நமது அரசியல் பலம், உரிமைகள் மற்றும் நம் எதிர்காலத்தையே வீழ்ச்சிப் பாதையில் கொண்டு சென்று விடும். குறைவான அரசியல் பிரதிநிதிகள் இருந்தால் நமது மாநிலங்களுக்கான நியாயமான நிதியை பெறுவதிலும், கொள்கைகளை பாதுகாப்பதிலும், மக்களின் தேவைகளை ஒன்றிய அரசிடம் கேட்டு பெறுவதிலும் கடுமையான சவால்களை எதிர்கொள்ள வேண்டியது வரும். எனவே அடுத்த 25 ஆண்டுகளுக்கு தொகுதி மறுவரை மேற்கொள்வதை தள்ளி வைக்க வேண்டும்.

ஒன்றிய அரசு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிதியை கடந்த 4.5 மாதங்களாக வழங்காததால், தமிழ்நாட்டில் 24 மார்ச் 2025 நிலவரப் படி இத்திட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதிய நிலுவை ரூ.2,985 கோடி (இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தி ஐந்து கோடி) மற்றும் Material Component (பொருட்களுக்கான) நிலுவை தொகை ரூ.1,048 கோடி (ஆயிரத்து நாற்பத்தி எட்டு கோடி) சேர்த்து மொத்த நிலுவை தொகை ரூ 4,034 கோடி(நான்காயிரத்து முப்பத்தி நான்கு கோடி) வழங்க வேண்டியுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிலுவையில் உள்ள நிதியை விடுவிக்குமாறு ஒன்றிய அரசை வலியுறுத்தி இந்தியாவின் நம்பர் 1 முதலைச்சர் தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி நடத்தும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்கனவே 13.01.2025 அன்று ஒன்றிய பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்கள். ஆனால் இன்று வரை நிதி விடுவிக்கப் படவில்லை. எனவே ஒன்றிய அரசை கண்டித்து தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது.

அண்ணாமலையை பெரிதாக பேசினார்கள். ஆனால் கோவையில் அவரை வீழ்த்தி உள்ளோம். கோவையில் வாக்களிக்காத மக்களுக்கும் பல திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வாரி வழங்கி உள்ளார்கள். அதனால் பொதுமக்கள் தி.மு.கவை ஆதரிக்கின்றனர். ஆகையால் வரவிருக்கின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், திராவிட மாடல் ஆட்சி நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான கூட்டணி கொங்கு மண்டலத்தை முழுமையா கைப்பற்றும் என்று மத்திய மாவட்டச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் செய்தியாளர்களிடம் கூறினார்.



தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் அவர்களின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு வல்லம் பேரூராட்சி சார்பாக தஞ்சை காதுகேளாதோர் பள்ளி மாணவ மாணவிகளுக்கு மதியம் அறுசுவை உணவு தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. தலைமையில் வழங்கப்பட்டது. உடன் தஞ்சை சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம், தலைமை செயற்குழு உறுப்பினர் து.செல்வம், தஞ்சை மாநகர துணை மேயர் மருத்துவர் அஞ்சுகம் பூபதி, தஞ்சாவூர் ஒன்றிய செயலாளர் தோ.அருளானந்தசாமி, பேரூர் செயலாளர் கல்யாணசுந்தரம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் பி.எஸ்.சரவணன் தலைமையில் மேற்கு மாவட்ட அவைத்தலைவர் கே.மனோகரன் முன்னிலையில் பி.பள்ளிப்பட்டி பஸ்நிறுத்தம் மற்றும் மெணசி பஸ்நிறுத்தம் ஆகிய இரண்டு இடங்களில் 100 நாள் வேலை உறுதி திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிற்கு வழங்கவேண்டிய நிதியை வழங்காமல் வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் தாமோதிரன், மாவட்ட தகவல்தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் சண்முகம், ஒன்றிய கழக நிர்வாகிகள் டி.மனோகரன், ஜாகிதாசெரீப், வே.செல்வன்,உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோடு, பள்ளிபாளையம் நகர கழகம் மற்றும் பரமத்தி வேலூர் பேரூர் கழகம் சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. பொதுக்கூட்டத்தில் நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே எஸ் மூர்த்தி தலைமை தாங்கினார். கூட்டத்தில் தமிழ்நாடு பாடநூல் கழக தலைவரும், கழக கொள்கை பரப்பு துணை செயலாளருமான திண்டுக்கல் லியோனி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் என்ற உறுதி மொழியை அனைவரும் எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில் நகர கழக செயலாளர்கள் தா.கார்த்திகேயன், அ.குமார், டி.விஜய் கண்ணன், ஞானசேகரன், திருச்செங்கோடு தொகுதி பொறுப்பாளர் அ.சீனிவாசன், பேரூர் கழக செயலாளர் முருகன், ஒன்றிய செயலாளர் வட்டூர் ஜீ தங்கவேல், செல்வராஜ், பி.பி.தனராசு, கே.கே.சண்முகம், எம்.தங்கவேல், செல்வம், இளங்கோவன், மகிழ் பிரபாகரன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள், வார்டு கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.